**செய்தி வெளியீடு எண்: 516** **நாள்: 02.08.2018**

## செய்தி வெளியீடு

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், பட்டப்படிப்பில் இறுதியாண்டு படிக்கும் மாணவ மாணவிகளுக்கு தொழில் முனைவோர் ஆவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக தமிழ் நாட்டில் உள்ள எண்பத்தியெட்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் விழிப்புணர்வை நடத்துவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

மாணவ மாணவிகளை தொழில் முனைவோராக்கும் உன்னத நோக்கோடு , கல்லூரி இறுதியாண்டு படிக்கும் மாணவ மாணவிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி இதுவரை மூன்று அரசு கலைக்கல்லூரிகளில் நடைபெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து நான்காவதாக வடசென்னை, பாரதி மகளிர் கல்லூரியில், 2. 8. 2018 அன்று தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப் பட்டது. இவ்விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி. டெ. கிளாடிஸ் அவர்கள் வரவேற்றுப் பேசினார். தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் பற்றியும் மாணவர்களை தொழில் முனைவோராக செயல் படுத்தப் படும் திட்டங்கள் பற்றியும் , நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திருமதி. ஆர். வீ. சஜீவனா, அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். இவ்விழாவின் தலைமை உரையாக, தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் அரசின் முதன்மை செயலாளர் / இயக்குனர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள், தொழில் தொடங்க வாருங்கள், தோள் கொடுக்க நாங்கள் என்ற நோக்கின் அடிப்படையில் மாணவர்கள் தொழில் முனைவோராவதற்கான வாய்ப்புகள் மற்றும் புத்தாக்க வழி முறைகள் மற்றும் கல்லூரி படிப்பை முடித்து வெளி வரும் போது தொழில் முனைவோர் என்ற பாதையில் தங்களது வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்றும், பெண் ஆற்றலின் தனித்தன்மை எப்படி அவர்களை உலகளாவிய அளவில் தொழில் முனைவோர்களாக மாற்றுகிறது என்பது பற்றியும் உரையாற்றினார். மேலும் உணர்வு சமநிலை மற்றும் பன்முக ஆளுமை பெண்களை தொழில் முனைவோர்களாக செயல்படுத்துவதில் மிகப்பெரிய பலமாக இருப்பதாகவும் மாணவிகளை ஊக்குவிக்கும் விதமாக பேசினார். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில், பாரதி மகளிர் கல்லூரியை சேர்ந்த 100 மாணவிகள் பங்கேற்று பயன்பெற்றார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**